வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் STC. No. 514/2024

வழக்கு சாட்சி – PW – 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. பிரபு | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 03.03.2025.

எதிரி ஆஜர்.

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 12.00 மணி)

நான் தற்போது இராமநாதபுரம் சரக மருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.07.2022 அன்று இராமநாதபுரம், விவேகானந்தர் சாலையிலுள்ள கதவு எண். 20/3 ல் இயங்கிவரும் வேலுமாணிக்கம் பார்மசி என்ற மருந்து விற்பனை கடைக்கு ஆய்விற்காக சென்றேன். ஆய்வின்போது மருந்தின் தரத்தினை அறியும் பொருட்டு எதிரி நடத்திவரும் ஜான்சன் & ஸ்மித் கோ என்ற மருந்து நிறுவனத்தால் தயார் செய்யப்பட்ட Ace cold total syrup தொகுதி எண். PL 21001 தயாரிப்பு தேதி.03/2021 காலாவதியாகும் தேதி 02/2023 என்ற மருந்தினை படிவம் 17ன் கீழ் கடையின் பொறுப்பாளர் திரு.முத்துக்குமார் முன்னிலையில் நான்கு பகுதிகளாக பிரித்து நன்கு கட்டி சீல் இடப்பட்டு RP/50/RMD/2022 Dated.21.07.2022 என மாதிரி எண் குறிக்கப்பட்டு நானும் திரு.முத்துக்குமாரும் தேதியிட்டு கையொப்பம் செய்தோம். **படிவம் 17– அ.சா.ஆ.1.** மருந்து மாதிரியின் ஒரு பகுதியையும் மற்றும் படிவம் 17 ன் 2 ம் பிரதியையும் கடையின் பொறுப்பாளரான முத்துக்குமாரிடம் ஒப்படைத்தேன். பிறகு RP/50/RMD/2022, Dated.21.07.2022 என எண்ணிடப்பட்டு 21.07.2022

தேதியிடப்பட்ட படிவம் –18 தயார் செய்து சீல் இடப்பட்ட மருந்தின் ஒன்றாவது பகுதியை சென்னையிலுள்ள அரசு மருந்துகள் பகுப்பாய்வு கூட அரசு மருந்துகள் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். **படிவம் –18 அ.சா.ஆ.2.** பின்பு 12.10.2022 அன்று 04707 – D/2022 – 2023 dated.28.09.2022 என்ற அறிக்கை எண் கொண்ட அரசு மருந்துகள் பகுப்பாய்வாளரின் அறிக்கையினை படிவம்–13ன் கீழ் பெற்றேன். அந்த அறிக்கையில் மேற்கூறிய மருந்தில் Phenylephrine Hydro chloride 67.20% மட்டுமே இருந்ததால் தரமற்றது என அரசு மருந்துகள் பகுப்பாய்வாளர் குறிப்பிட்டிருந்தார். **படிவம் –13 அ.சா.ஆ.3.** ஆகவே 13.10.2022 அன்று வேலுமாணிக்கம் பார்மசியின் பொறுப்பாளர் திரு.முத்துக்குமார் அவர்களிடம் மேற்கூறிய மருந்துகள் யாரிடமிருந்து பெறப்பட்டது என கேட்டு விளக்கம்கோரும் குறிப்பாணை ஒன்றினை நேரில் அளித்தேன். அந்த **குறிப்பாணை அ.சா.ஆ.4**. அதற்கு பதிலளிளத்த திரு. முத்துக்குமார் மருந்தினை மதுரையிலுள்ள அழகு மீனாட்சி ஏஜென்சிஸ் என்ற நிறுவனத்திடமிருந்து Invoice No. AMA/188/21–22 என்ற எண் கொண்ட ரசீது மூலம் கொள்முதல் செய்ததாக குறிப்பிட்டார். **திரு. முத்துக்குமார் ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட பதில் கடிதம் அ.சாஆ.5.** பின்பு 14.10.2022 அன்று மதுரையிலுள்ள அழகு மீனாட்சி ஏஜென்சிஸ் என்ற நிறுவனத்திற்கு மேற்கூறிய மருந்து யாரிடமிருந்து பெறப்பட்டது என கேட்டு விளக்கம் கோரும் குறிப்பாணையை பதிவு தபாலில் அனுப்பி வைத்தேன் அந்த **குறிப்பாணை அ.சா.ஆ.6.** குறிப்பாணைக்கு பதிலளித்த அழகு மீனாட்சி ஏஜென்சிஸ் உரிமையாளர் பெங்களுரிலுள்ள D And D International என்ற நிறுவனத்திடமிருந்து Invoice No.4800 dated.27.03.2021 என்ற எண் கொண்ட ரசீதின் மூலம் கொள்முதல் செய்ததாக குறிப்பிட்டார். **அழகு மீனாட்சி ஏஜென்சிஸ் உரிமையாளர் கொடுத்த ஆவணங்களுடன் கொடுத்த பதில் கடிதம் அ .சா.ஆ.7.** பின்பு 02.11.2022 அன்று பெங்களுரிலுள்ள D And D International என்ற நிறுவனத்திற்கு மேற்கூறிய மருந்து யாரிடமிருந்து

பெறப்பட்டது என கேட்டு விளக்கம் கோரும் குறிப்பாணை பதிவு தபாலில் அனுப்பி வைத்தேன். அந்த **குறிப்பாணை அ.சா.ஆ.8.** அதற்கு பதிலளித்த D And D International நிறுவனத்தின் உரிமையாளர் பெங்களூரிலுள்ள ஜான்சன் & ஸ்மித் கோ என்ற மருந்து தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ததாக பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். **ஆவணங்களுடன் இணைந்த அந்த பதில் கடிதம் அ.சா.ஆ.9.** ஆகவே ஜான்சன் & ஸ்மித் கோ என்ற மருந்து தயாரிப்பு நிறுவனம் தரமற்ற மருந்துகளை தயாரித்து விற்பனை செய்தது தெரியவந்தது. ஜான்சன் & ஸ்மித் கோ என்ற நிறுவனம் தரமற்ற மருந்தை தயாரித்து விற்பனை செய்தது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(C)ன் கீழ் குற்றமாகும். ஆகவே 08.12.2022 தேதியிடப்பட்ட குறிப்பாணையை 09.12.2022 அன்று எதிரி நடத்திவரும் ஜான்சன் & ஸ்மித் கோ என்ற நிறுவனம் தரமற்ற மருந்தை தயாரித்து விற்பனை செய்தது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு பிரிவு 18(C)ன் கீழ் குற்றம் என குறிப்பிட்டும் மருந்து தயாரிப்பு உரிமங்கள் உள்ளிட்ட 15 வகையான ஆவணங்களை மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18 B ன் கீழ் சமர்பிக்ககோரியும் பதிவஞ்சலில் விளக்கம்கோரும் குறிப்பாணையை படிவம் –13 உடன் இணைத்து அனுப்பி வைத்தேன். அந்த குறிப்பாணை **அ.சா.ஆ.10.** மேலும் தனியாக மருந்து மாதிரியின் மூன்றாவது பகுதியை பதிவு பார்சலில் மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 23(4)(i) ன் கீழ் அனுப்பி வைத்தேன். அந்த **கடிதம் அ.சா.ஆ.11.** பின்பு 21.12.2022 அன்று எதிரியின் நிறுவனமான **ஜான்சன் & ஸ்மித் கோ என்ற நிறுவனத்திடமிருந்து பதில் கடிதம் கிடைத்தது. அந்த கடிதம் அ.சா.ஆ.12**. ஜான்சன் & ஸ்மித் கோ என்ற நிறுவனம் அளித்த பதில் கடிதத்துடன் மருந்து தயாரிப்பு உரிமங்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை உள்ளிட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி

நிறுவனத்தில் பதில் திருப்தியளிக்காததால்

1. ஜான்சன் & ஸ்மித் கோ B–48, Peenya industrial estate, Bangalore – 560058 பிரதிநிதித்துவம் –C . அசோக்குமார்.

2. பங்குதாரர் மற்றும் தினசரி தொழில் நடைமுறையை கவனித்து வருபவர் C .அசோக்குமார் – ஆகியோர் மீது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) r/w 27(d) ன் கீழ் வழக்கு தொடர அனுமதி ஆணை வேண்டி சென்னை மருந்து கட்டுப்பாடு பிரிவு இயக்குநர் அலுவலகத்திற்கு 30.12.2022 அன்று முன்மொழிவு ஒன்றை அனுப்பி வைத்தேன் அந்த **முன்மொழிவு அ.சா.ஆ.13.** பின்பு சென்னை மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அவர்கள் எதிரி மீது வழக்கு தொடர 555/IW/2023 dated. 08.02.2023 என்ற எண் கொண்ட அனுமதி ஆணையை வழங்கினார். அந்த **அனுமதி ஆணை அ.சா.ஆ.14**. **பின்பு** ஜான்சன் & ஸ்மித் கோ, B–48 Peenya industrial estate, Bangalore – 560058 மற்றும் பங்குதாரர் மற்றும் தினசரி தொழில் நடைமுறையை கவனித்து வருபவர் C .அசோக்குமார் ஆகியோர் மீது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(c) r/w 27(d) ன் கீழ் தனி புகார் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். பின்பு 26.07.2024 அன்று மருந்து மாதிரியின் ஒரு பகுதியை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். நான் **நீதிமன்றத்தில் ஒப்படைத்த மருந்து மாதிரியின் ஒரு பகுதி அ.சா.பொ.1**. எனவே எதிரி மேற்கண்ட பிரிவின் கீழ் குற்றமிழைத்துள்ளதால் மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

(ஒம்/– சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.